

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும்

கனடாவில் வாழ்ந்து வந்தவருமான

# உயர் திரு. கதிரவேலு இராமநாதர்

அவர்களின் வாழ்வியல் குறித்த

# நினைவுக் கலசம்

05-04-2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அமரர் உயர் திரு. கதிரவேலு இராமநாதர்

தோற்றம்
10-01-1932

மறைவு
06-03-2016

### திதி நிர்ணய வெண்பா

சீரார் மன்மத ஆண்டு சேர் மாசி சிவராத்திரி
பேரார் அமர பக்கப் பொற் திதியாம்
திரயோதசியில் சீராளன் கதிரவேல் நல்லூர்க் கந்தன்
அருள் பெற்று சீரான சிவம் பாதம் சேர்ந்த நன்நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



இரு மரபும் துாய தனிநாயக முதலி வழித்தோன்றலும் சிவனருட் செல்வரும், சற்குணவாளருமான

**அமரர் உயர் திரு. கதிரவேலு இராமநாதர்**
அவர்களின் வாழ்வியல் குறித்த

# நினைவு மலர்

05.04.2016
கனடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்





வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்பட்டிருக்கும் எமது அன்பிற்கும்
பாசத்திற்குமுரிய குடும்பத் தலைவன்

# அமரர் உயர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்களின் பாதார விந்தங்களுக்கு இம்மலர் சமர்ப்பணமாக...

முந்தை வினைப்பயனால் தந்தையென வந்துதித்து
சிந்தைத் தெளிவுடனே சீர்பலவுந் தந்தெமக்கு
விந்தை உலகில் நாம் வாழ வழி செய்திட்டு
வெந்தணலில் வீழ்ந்திறைவன் திருவடியை அடைந்திட்ட
சுந்தரத் தலைவனெங்கள் கதிரவேலு அண்ணல் திருவடிக்கே
பந்தத்தை, பாசத்தை குளைத்தெடுத்து ஓர் மலராக்கி
செந்தமிழ் மணங்கமழ சிறுநூலாய் செதுக்கியதை
தந்தோம் சமர்பணமாய் ஏற்றுடுவீர் நன்றே!



ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## Vinayagar Thuthi

Ainthu Karath thanai aanai muhath thanai
Inthin ilampirai pohlum yeitrranai
Nanthi mahan thani gnaanak kolun dhinaip
Punthiyil vaitthadi poattru ghindrane



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராண அடுக்கு

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான் உனைநாட்பணிந் தேத்தவருள் செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே

# PANSAPURANA ADUKKU

## THEVARAM.

Thodudaya seveijen viday yerior thooveen mathy suddi
Kaddu udaya sudalaip podi pusiyen ullangavar kallvan
Eddudaya malaraan uni nat paninth thetha arul seitha
Pee dudaya pirama puram meviya pemaan ivan andreh.

Kuninth tha puruvamum kovai sevaiyit gumun sirippum
Panit tha sadayum pavalam pool meniyum
Iinitha mudaiya edutha pot pathamum kana pet taal
Manitha piraviyum vaendu vathae in the maani lathey.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்தி நெறி அறிவித்துப் பழ வினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனெனக் கருளியவார் யார் பெறுவார் அச்சோவே

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விழைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## THIRUVAASAGAM.

Muthi neeri ariatha Moorkarodu muyal veenai
Pakthi neeri arivithu Pala vinaikal paarum vannam
Chiththa malam arivithu Sivamaakki enai aandda
Athan enak karuliya vaar Aar puruvaar acchovey

Ammiye appa Oppila maniye
Anpinil villayntha Aaramuthey
Poimy ye perukki Polithinich churukkum
Puluth thali Pulayaneen thana kuch
Semmay ye aaya Sivaptham aliththa
Selvamey Siva peru maaney
Immay ye Unai Chickkena pidithaen
Engelun Tharuluva Thiniyee



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

## THIRUVESAIPPA

Katravar vilankum katpaga kaniyai
karaiyilak karunai maa kadalai
matravar arija manikka malaijai
mathippavar mana mani vilakkai
setravar purankal setra em sivanai
thiruveeli milalai veetruruntha
kotravan thannai kandu kandullam
kulera en kankal kulirnthanavee.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

குழல் ஒலி யாழ் ஒலி கூத்தொலி எத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழல் ஒலி விண்ணளவும் சென்று விம்மி
மிகு திருவாரூரில்
மழவிடை யார்க்கு வழி வழி ஆளாய்
மணம் செய் குடி பிறந்த
பழவடி யாரொடும் கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

# THIRUPALLAANDU.

Paalukku Paalagan Veendy Aluthida
Paart Kadal Eentha Piraan
Maalukku Shakkarm Antraul Seythavan
Manniya Thilai Thannull
Aalikkum Anthanar Vaalkinra
Sitam Palamay Ida maaka
Paalithu Naddam Payila Vallanukke
Pallandu kuruithumey.

Kulal Oli Yarl Oli kuthu Oli Eath Oli
Engum Kulaam Perugi
Villal Oli Vinaalalayum Sentru Vimmi
Migu Thiru Vaaruril
Mala Vidai Yaarkku Valli Valli Aalaai
Manaam Sei Kudi Pirantha
Pala vadi yaarodum Kuudi Emmaanuke
Pallandu Kuruthu mey.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி
காஞ்சி மாவடிவை குஞ்செவ்வேள் மலரடி போற்றி அண்ணான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம் படி வாழ்த்தி வணங்குவாம்

## THIRUPURAANAM.

Moviru mugangal Potri Mugam Poli Karunai Potti
Aey varum Thuthika Nintra Eeraaru Thoal Potti
Kanchi Mavadi Vaykam Seveel Malaradi Potti Annaan
Sevalum Maylium Potti Thiruk kai Veel Potti

Ulaa Kellaam Unarnthu Oothu That Kariyavan
Nilavu Laavian Neer veeli veenian
Alakil Soothian Ampalth Thaadu Vaan
Malar Silam Padi Vaal thi Vanag Guvaan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

திருச்சிற்றம்பலம்

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில்நீங்கா தான் தாள்வாழ்க
கோகலி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum
Sivamayam

Thiruchittampalam

# SIVAPURANAM

Namachivaya valga Nathan tharl varlga
Immaip poluthum en nencil Neengathan thaal Varlga
Kokali aanda Kurunani then thaal varlga
Akkamam aaki ninru, Annippan thaal vaalga
Ekan anekan Iraivan adi varlga

Vekam keduth thaanda Venthan adi velga
Pirapparakum pinjakan then Peykalakal velga
Purath tharkuch seyon then poonkalagal velga
Karaguvivar ul magilum koan kalagal velga
Siran guvivar omgu vikkum seerohn kalal velga

Eesan adi portti Enthai adi portti
Thesan adi portti Sivan sevadi portti
Neyathe nindra Nimalan adi portti
Maya pirapparukum Mannan adi portti
Seerar perunthuri nam Thevan adi portti

Aaratha impam Arulum malai portti
Sivan avav en sinthaiyur ninra athanaal
Avan arulale avan tharl vananki
Sinthai Mahilach Sivapuranam thannai
Munthai vinai muluthum oya uraippan yan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற வித்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமா னனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமாளே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருள்வாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kannuthalaan than karunai kann kaatta vantheithi
Ennuthatku edda elilar lalal iranchi
Vinnira inthu man nirainthu mikai vilanglyai
Ennitanthellai ilathtney nin peruncheer
Polla vinaiyane Pugalumaru onrraiyane

Pull aahi Poodai pulavai maramaahi
Pal virugam aahi paravayai pampahi
Kallai manitharai peyai kanangalai
Val asurar aahi munivaraui thevarai
Sella ninra ith thavara sangamathu

Ellap pirappum piranth ilathane emperumaan
Meiya unn ponnadigal kandu inru veedutaen
Uya enn ullaththu Om garanai ninra
Meiya vimala vidai paga vethangal
Aya' ena ongi ainthu akndru nunnianae

Veyai thaniyai Iyamaana naam vimala
Poyayaina ellam Poyagala vantharuli
Meyjananam aahi Milir kinrai miechudaray
En jnanam illathane inpap perumaney
An jnanam thannai akklvikum nal arivey

Aakkam alavu iriuthi illai anaithulakum
Aakuvai kaapai alippai arul tharuvai
Porkkuvai ennai pukuvippai nin tholepin
Naattrathin neriai seyai naniane
Matram manam kalia ninra marayoney


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார முதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Karantha paal kannalodu nei Kalanthat pola
Siranth adiyar sinthanaiyul tenoori ninru
Pirantha pirappaukum engal perumaan
Nirangal ore eyenthu udayai vinnorgal eththa
Marainth irunthai emperuman vulvinai eththa

Marainthida moodia maya irulai
Aram paavam ennum arung kaitral kattip
Puran thol Porthu engum pulu aluku moodi
Malam sorum onpathu vayi kudilai
Malankap pulan eyenthum vanjanaiyai seya

Vilanku manaththal vimala unaku
Kalanthu anpakik kasinthu ul urugum
Nalanthan ilatha siriyetku nalki
Nalanthaan male vantharuli neer kalzalkal kaatti
Nayit kadiyaik kidantha adiyetkuth

Thayit siratha thayavana thtthuvaneh
Maasatra sothy Malarntha malar sudareh
Thesaneh thaenar amuthey siva puraneh
Pasamaam pattarthup paaikum aariyaneh
Nesa arul purinthu nenchil vanchang kedap

Perathu ninra perung karunaip peraray
Aara amuthey alavilaap pemmaneh
Orathar ullathul olikum oliyaney
Neerai urukien aaruyirai nindraneh
Impamum thun pamum illaneh ullaneeh


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றானா உண்ணார் அழுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Anparuku anpaneh yavaiyumai allayummaam
Sothiyaneh thum iruleh thonraap perumayaneh
Athiyaneh antham Naduvaki allaneh
Eertthennai artkonda enthai permaaneh
Koora menjanathal kunduar vaar thangkaruthin

Nokaria nokeh nunkaria nunnunarveh
Pokum varavum punarvum ilap punnaineh
Kakum em kavalaneh kaan paria per oliye
Aatinpa vellameh Aththmickai nindra
Thottach sudar oliyai sollatha nunnunarvai

Mattara maam vyakathin vevereh vantharivaam
Thetaneh thetah theliveh en sinthanaiyul
Oorttana unnar amuthey udiyaneh
Vetru vigara vidakudampin udkidappa
Aatane em aya aranehyoh enrenru

Portrip Pugaln thirunthu Poi kettu meyanar
Meetingu vanthu vinaip piravi saarameh
Kallap pula kurambai kaddalika vallaneh
Nal irulil naddam pyinradum naathaneh
Thillayul koothaneh Then paandi naattaneh

Aliai piravi aruppaaneh oh' enru
Sollatku ariaanai solli thiruvadikeel
Sollia pattin porul unarnthu solluvar
Selvar sivapurathin ullar sivan adikeel
Pallorum Ethap paninthu

Thiruchittampalam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்களின் வாழ்க்கை வரலாறு

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே, அவர் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே, இதை வந்தனை கூறி மனதில் இருத்தி என் வாயுற வாழ்த்தேனோ" என்ற பாரதியாரின் பாடல் நெடுந்தீவின் பெருமைகளை நினைவினில் கொண்டு வருகின்றது.

உப்புக் காற்றும், உவரி நிலமும், வெண் மணல் கடற்கரைகளும், வானோங்கும் பனைகளும், வளம் நிறை தென்னைகளும், ஆநிரைகளும், மாநிரைகளும் நிறைந்த, மனதை விட்டு என்றும் அகலமாட்டாத அற்புதமான அனுபவங்களைத் தந்தருளிய நெடுந்தீவு மேற்கில் 1932 ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி இராமநாதர் - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனாக பிறந்தார். இவருக்கு இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) மற்றும் தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்), ஆறுமுகம் (ஓய்வுபெற்ற மிருக வைத்தியர்), என்ற 3 சகோதரர்களும், செங்கமலம் என்னும் அன்புச் சகோதரியும் உள்ளார்கள்.

ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு மேற்கில் உள்ள பாடசாலையில் பயின்று, நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலையில் ஊழியராகக் கடமையில் சேர்ந்தார். செய்யும் தொழிலை தெய்வமாக மதித்த இவர், தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்களுக்கு வழங்கிய இவரது விருந்தோம்பல் இன்று வரை பலராலும் போற்றப்படுகின்றது.

ஒரு மனிதனின் மரணம் மதிப்புடையதாக இருக்க வேண்டும். மரணத்தை அறிவது வாழ்வின் உண்மையான நோக்கம் ஆகும். உண்மையில் பிறப்பையும், இறப்பையும் பிரிக்க இயலாது, ஒரே விஷயத்தின் இரு வேறு ஆக்கக் கூறுகள் அவை. அழிவுடைய இந்த உடலுக்கு அப்பால் உள்ள நிகழ்வினை அறிய, வாழ்வை அதன் அனைத்துப் பரிமாணங்களிலும் வைத்து அறிய வேண்டும். அந்த வகையில் அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்கள் தனக்கே உரிய நற்பண்புகளாலும், மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மையாலும் எம்மிடமிருந்து உயர்ந்து நிற்கின்றார். எதிர்பார்ப்புகள் எதுவும் இல்லாத அவரது சிந்தனைகள் ஒரு மனிதன் இந்த உலகில் எப்படி வாழவேண்டும் என்பதை நிறுவி நிற்கின்றது.

கருணையின் உருவமாகவும், அன்பின் வடிவமாகவும், மனிதருள் மாணிக்கமாகவும் திகழ்ந்த அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்கள் ஆற்றிய பணிகள் அளப்பரியன. வைத்தியர்கள் கொடுக்கும் மருந்து, மாத்திரைகளை நோயுற்ற உறவினர்களுக்கு மறக்காமல் நினைவுபடுத்துவது, வைத்தியசாலை முன்பதிவு நேரங்களைத் தவறாமல் தெரியப்படுத்துவது போன்ற பல விடயங்கள் இவரின் அன்றாட கடமைகளாக இருக்கும். அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்களின் உடல் அழிந்தாலும் எமது உள்ளங்களில் அவர் என்றும் நிலைத்து வாழ்வார் என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் சில மனிதர்களை சில வேலைகளுக்காக பிரத்தியேகமாக படைத்திருப்பதை நாங்கள் அறிவோம். அந்தப் படைப்பின் முழுமையான ஒரு உதாரணம் அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் என்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். அந்த வகையில் அமைதியாக ஆரவாரம் இன்றி, எந்தவித வெளிப்படுதல்கள் இன்றி தொண்டு செய்வதன் இலக்கணமாகத் திகழ்ந்தவர் இவர்.

'அமைதி என்பது ஒரு புன்னகையில் ஆரம்பிக்கிறது' என்ற அன்னை திரேசாவின் வார்த்தைகளைப் போல் அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்களிடம் எப்போதும் ஒரு புன்னகை இருந்து கொண்டே இருக்கும். அந்தப் புன்னகை அவரது உள்ளத்தில் தோன்றும் அமைதியான உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கும் ஒரு செயற்பாடாகவே தோன்றும். எதற்கும் மனம் கோணாது, சிறு புன்னகை சிந்திச் செல்வது அவரின் பணிவான, உறுதியான பெரும் தன்மையை எடுத்தியம்பும்.

மென்மையான மனத்தை உடைய அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்கள் பரராஜலிங்கம், மாரிட், ஜெயக்குமார், ஷாமினி, டலிதா ஆகியோரின் பிரியமுள்ள மாமனாராகத் திகழ்ந்து பிரசாத், பிரகாஷ், வைஷ்ணவி, ஹன்சியா, பிரவீன், பிரசான் ஆகியோரின் பேரன்புப் பேரனாக உலகுக்கு பெருமை சேர்த்துச் சென்றுள்ளார்.

இவர் தனது வாழ்க்கையின் வரலாற்றில் ஒரு சாதாரண மனிதனாக வாழ்ந்து பல அன்பு உள்ளங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசத்தை சம்பாதித்து வைத்திருக்கின்றார் என்பதைக் காணமுடிகின்றது. இறை யாத்திரையில் நிரம்பிய பார்வையாளர்களின் இறுதி அஞ்சலிகள் அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்கள் சேர்த்து வைத்த மனித மனங்களின் நேசத்தை தெளிவுபடுத்திச் சென்றன. நற்குணம், அனுசரிப்பு, ஆளுமை, அன்பு போன்ற எல்லாவற்றையும் ஆங்காங்கே பாகம் பிரித்து, நினைவுகளாகக் கொடுத்து விட்டுப் போயிருக்கிறார். அவர் சேர்ந்து வைத்த ஆன்மபலம் அவருக்கு நிரந்தரமான இறைபதத்தைக் கொடுக்கும் என்பதில் நம்பிக்கை கொள்வோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

உலகத்தில் வாழவேண்டிய முறையில் வாழ்கின்றவன், வானுலகத்தில் உள்ள தெய்வநிலையில் வைத்து மதிக்கப்படுவான்.

என்ற குறள் மொழி தரும் கருத்துக்கு ஏற்ப தெளிந்த நீரோடை போன்று வாழ்ந்து முடித்த அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் மனத்துயரம்

அன்று மணப்பந்தலில் மாலையிட்டு என் கரம்
பற்றிய அருமைதனை நினைத்து அழுவனோ.
அன்றிலும் பெடையுமாய் என்றுமே வாழ்ந்திட்ட
அருமை தனை நினைத்து அழுவனோ

முத்து முத்தாம் பெற்ற முத்துப் பிள்ளைகள் ஐவர்
முகச் சோர்வு கண்டு அழுவனோ.
அன்பான மருமக்கள் படும் வேதனை கண்டு அழுவனோ
அன்பான பேரர்கள் எம் தாத்தா எங்கே என்று
எனைக் கேட்டால் ஏது நான் பதில் சொல்வேன்
நோயுற்று மருத்துவமனை சென்றதில்லை.
பக்கத்தில் நான் பாத்து இருக்க
நொடிப்பொழுதில் மறைந்த மாயமென்ன
என் செய்வேன் ஏங்கினேன் தவித்தேன்
யாது செய்வேன்.

கணப் பொழுதும் எந்தனை பிரிந்திடாதவரே
கதி கலங்க வைத்து விட்டு காணாமல் போனீரே

உடலால் எந்தனை விட்டு பிரிந்தாலும்
எந்தன் உயிரோடு கலந்து வாழ்ந்திடுவீர்



என்றும் உங்களோடு வாழும்

**அன்பு மனைவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பான என் அப்பா

அன்பான முகத்துடனும் மாறாத சிரிப்புடனும் எம் குடும்ப நல் விளக்காய் ஒளி தந்து வாழ வைத்த எங்கள் அப்பா.
எந்தக் காலத்திலும் இனி எப்போதும் உங்களைப் போல் அன்புள்ளமும், அரவணைப்பும் நிறைந்த என் அப்பாவைக் கண்டிடவே இயலாது.

உங்களுடன் வாழந்த நாட்கள் விழிநீரை வரவழைக்கும் ஞாபகங்களாய் இறுதி வரை என்னுடன் இருக்கும் அப்பா.
உங்கள் அருகில் வந்து 'அப்பா' என்றேன். ஆனால் நீங்களோ இவ்வுலகை விட்டு பயணித்துக்கொண்டு இருந்தீர்கள்.

முதலுதவி தந்து உங்கள் மூச்சுக் காற்றினை திருப்ப முனைந்த போது, நீங்களோ இவ்வுலக வாழ்வை இனிதே நிறைவேற்றிய திருப்தியுடன் விடைபெற்று என்னை மீளாத்துயரில் மூழ்கடித்து விட்டீர்களே அப்பா.

கணப்பொழுதும் அம்மாவைப் பிரிந்தறியா அப்பாவே! கதிகலங்க வைத்துவிட்டு காணாமல் போனீரே.
மருமகன் மேல் அளவில்லாத அன்பு கொண்டு மகிழ்ந்தீர் அப்பா.

பேரப்பிள்ளைகளை ஒரு பொழுதேனும் காணாவிட்டால் கதிகலங்கிப் போய் விடுவீர்களே அப்பா
நான் இன்று கதி கலங்கி கதறி அழுகின்றேன்.

உங்கள் நினைவுகளுடன்

*மகள் ராணி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள அப்பாவுக்கு...

54 வருடங்கள் உங்களோடு சேர்ந்து வாழும் கிருபை எனக்குக் கிடைத்ததையிட்டு சந்தோஷப்படுகிறேன்.

84 வருடங்கள் எங்களோடு இருந்து, தற்போது இந்த உலகத்தை விட்டு போய் விட்டீர்கள். உங்களது இழப்பு எமது இதயத்தில் பெரும் தாக்கத்தை உருவாக்கி உள்ளது. தற்பொழுது எங்களை விட்டு நீங்கள் பிரிந்து இருந்தாலும், உங்களது நினைவுகள் எங்களோடுதான் இருக்கிறது.

எப்படியான நினைவுகளை நீங்கள் எங்களோடு விட்டு போனீர்கள், என நினைக்கும் போது எனது மனதுக்கு வருவது:

- உங்களது முகத்தில் இருந்து வரும் புன்னகை
- விடயங்களை அமைதியாகக் கையாழும் வழக்கம்
- பொறுமையாக இருந்து விடயங்களை முடிக்கும் பழக்கம்
- உங்களது நோக்கத்தை எங்களுக்காகப் பயன்படுத்தியது
- எந்தப் பாரத்தையும் வெளிக்காட்டாது எங்களைப் பராமரித்தது
- யாரையுமே குறை கூறாத நல் மனம்
- எங்கள் மேல் காட்டிய பேரன்பு

அன்பு என்று எழுதும் போது எப்படியான அன்பை எங்கள் மேல் காட்டியுள்ளீர்கள் என எழுதவும் வேண்டும்.

அன்பு என்றால் என்ன?

அன்பு, நீடிய சாந்தமும் தயவுமுள்ளது

அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது

அன்பு அயோக்கியம் செய்யாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு தற்பொழிவை நாடாது
அன்பு சினமடையாது
அன்பு தீங்கு நினையாது
அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சந்தோஷத்தில் சந்தோஷப்படும்

அன்பு சகலதையும் தாங்கும், சகலதையும் விசுவாசிக்கும், சகலதையும் நம்பும், சகலதையும் சகிக்கும்
இப்படியான அன்பை எங்களுக்குத் தந்து தற்போது எங்களைப் படைத்த ஆண்டவனோடு சேர்ந்து விட்டீர்கள்.
நீங்கள் காட்டிய அன்புக்கு இறப்பு இல்லாதது போல உங்களது. ஆத்மாவுக்கும் இறப்பு இல்லை என விசுவாசிக்கிறேன். இறப்பைக் காணாத உங்களது ஆத்மா எங்களைப் படைத்த இறைவனோடு சேர்ந்து விட்டதை எண்ணி எனது மனது நிறைவு அடைகிறது.

இந்த நிறைவும், நீங்கள் காட்டிய அன்பும், எமது இதயத்திற்கு புரண திருப்தி தருகிறது.



மீண்டும் சந்திப்போம்
**அன்பு மகன் யோகன்.**
நோர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புக்கினிய என் அப்பாவே!

கண்ணுக்கு இமையாக எங்களைக் காத்து
அன்பையும் பண்பையும் ஊட்டி வளர்த்து
கல்வி என்னும் செல்வத்தை அள்ளித் தந்து
தரணியிலே எங்களை உயர வைத்த அப்பாவே

அப்பாவாய் நல் ஆசானாய் குடும்பத்தின் தெய்வமாய்
பழகுவதற்கு நல்லவராய் விருந்தோம்பலில் சிறந்தவராய்
வாழ்ந்த என் அப்பாவே

உங்கள் நினைவுகள் என் மனதில் என்றும்
நிலையாக நிற்கும்

உங்கள் பிரிவால் வாடும்
**உங்கள் மகள் கௌரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பா

எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் தனக்காக வாழாமல் பிள்ளைகளுக்காக தன் வாழ்க்கை முறைமையை மாற்றிக் கொண்ட மாமனிதர் எங்கள் அப்பா. இதற்குப் பல உதாரணங்கள் சொல்லலாம். அவற்றில் ஒன்று, தனது வேலைத் தள நிகழ்வுகளில் வழங்கப்படும் தனது உணவினை தான் உண்ணாமல் அவற்றையெல்லாம் எங்களுக்குக் கொண்டு வந்து தருவார். அத்துடன் அவற்றை நாம் உண்பதைக் கண்டு அவர் முகத்தில் பெரு மகிழ்ச்சி வெளிப்படும். தனது ஓய்வு நேரங்களைக் கூட வேலை நேரங்களாக மாற்றுவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு, எங்கள் கல்வி நிலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு பெரும் பாடுபட்டார். எங்களை மிகவும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு, தனது நிலைக்கு அப்பால் சென்று பாடுபட்டவர் எங்கள் அப்பா.

தனது இரத்தத்தை வேர்வையாகவும், கோழி தன் குஞ்சுகளை சிறகினுள் அரவணைப்பது போல் எம்மையும் அரவணைத்த எம் தெய்வத்திற்குரியவர் இன்று எம்மை விட்டு நிரந்தரமாக சென்றுவிட்டார். தன் உயிரை என் மடியில் சாய்த்துக் கொண்டமை எனக்கு வேதனையைத் தருகின்றபோதும், அதனையிட்டு நான் மகிழ்ச்சி கொள்வதோடு, பூர்வ ஜென்ம பாக்கியம் கிடைத்ததாகவும் கருதுகின்றேன். எங்கள் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

எப்போதும் உங்கள் நினைவோடு வாழ்ந்து கொண்டிருக்கும்
உங்கள் மகன்

**கண்ணன்**

# அருமைப் பேத்தி

தாத்தா... தாத்தா....

ஹன்சியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புள்ள அப்பாவிற்கு...

அப்பாவென அழைத்திட வாய் நிறைகின்றது.
அப்பா இன்று இல்லையென கண்கள் நிறைகின்றது
போன வருடம் உங்களைப் பார்க்க வந்தேன் அப்பா
இந்த வருடம் உங்கள் பிரிவு செய்தியால் என் மனம்
உடைந்தே விட்டது.

இன்பத்திலும் துன்பத்திலும் எதுவித குறையுமின்றி
இயற்கையான வாழ்வில் ஏற்ற இறக்கங்களை
எளிதாக்கி இனிமையாக எதிர் கொண்ட அப்பாவே

அழகான இடைநடையாய் நடந்து வரும் அப்பாவே
நோயுற்று இருந்ததைப் பார்த்ததேயில்லை.

நூறு ஆண்டுகள் வாழ்ந்திடுவீர் என்றிருந்தேன்
சொல்லாமல் போனதென்ன

சோகமே உருவாகினேன் அப்பா
நீங்கள் மீண்டும் பிறப்பெடுத்து வந்திடுவீர்களென
காத்திருப்பேன் நான் வாழ்ந்திடும் காலமெல்லாம்.



உங்கள் பிரிவால் தவிக்கும்

**மகன் குகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகனின் உள்ளக் குமுறல்

அன்பிற்கு மிக இனியவராம்
மற்றவர் மனம் நோகாமல் பழகுவதில் உத்தமராய்
பண்பிலே வான் போல் உயர்ந்து நின்றவரே
தென்புடன் இருந்த நீங்கள் இல்லை யென
என்மனம் வேதனை அடைகின்றது.
எங்களுடன் உடனிருந்த காலங்களை நினைத்திட
நெஞ்சம் நித்தம் நிறைகின்றது.
என்மேல் அளவில்லா பிரியம் கொண்டிருந்தீர்
பெற்ற பிள்ளையை உவந்தளித்தீர்
பேரப் பிள்ளைகளிடம் அளவிலா அன்பு கொண்டிருந்தீர்
மண்ணுலகை விட்டு நீங்கள் மறைந்திட்டாலும்
உங்கள் பெருமை என் மனதில் என்றும் வாழும்
உங்கள் பிரிவால் துயருறும்

**மருமகன் லிங்கம்**

## மருமகனின் மனத்தாங்கல்

வன் சொல் எதையும் உம் வாயுரைத்ததில்லை
வெண்ணிலவு சுடுகின்றது
வெளிச்சமோ வரமறுக்கின்றது
கண்ணீரில் கலங்கி தவிக்கின்றேன்
உங்கள் பிரிவால் துயருறும்

**மருமகன் ஜெயக்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear Father In Law

## You are deep missed and high loved

You have make foot steps all around you, also in Norway. I was blessed with you as my father in law for nearly 30 years ! I talked english and norwegian to you,and you talked back in tamil . And you smiled. You smiled often,and I love you for that ! You had a BIG WARM hart full of love for all your family! You always thanked of and about everybody's best. You gave a lot of and from your self. I remember when you was in Bergen several years ago, when I came home from work,you and mother in law stood at the kitchen and make food for me when I came home from work, tired. All your love and effort . Im looking forward to meet you again one day dear father in law, and together we will praise the Lord who gave His life for us, The Living God. Thank you for given life to Yogan,my dear husbond, your oldest son ! Im blessed !

Miss you,and love you !!!

Marit









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகளின் மனக் குமுறல்

அணைந்த தீபமாய் ஆகிப்போனதே
உடைந்து போன சிலை ஆனதே - நான்
மாமா என அழைத்த சொல் கொள்ளை போனதே
நினைத்து நினைத்து நெஞ்சம் உருகுதே மாமாவே
நீங்கிடத் துன்பம் பெருகுதே!
மரணம் எல்லோருக்கும் விதிதான் - ஆனால்
உங்கள் மரணத்தை ஏற்றுக் கொள்ளமுடியவில்லையே
உங்கள் ஆத்மா சாந்திக்காய் பிரார்த்திக்கின்றேன்.

அன்பு மருமகள்
**ஷாமினி**

## என்றும் அன்பான மாமா

என் மனதில் நிறைந்த ஜோதியாய்
அன்பிலும் பண்பிலும் சிறந்தவரே!
உங்களோடு நான் தொலைபேசியில்
கதைத்த நாட்கள் மறக்க முடியாத
பசுமையானவையே!

உங்கள் இனிமையான வார்த்தைகள் என்றும்
என் மனதை விட்டு அழியாது.
நலமுடன் இவ்வுலகில் வாழ்ந்த நீங்கள்
காலை விடியுமுன் காலன் கவர்ந்த தென்ன
நீங்கள் இவ்வுலகில் இல்லை என்றாலும்
உங்கள் தோற்றமும் செயல்களும் அழியாது
உங்கள் உயிர் பிரிந்த செய்தி கேட்டு
துன்பத்தில் துடியாய் துடிக்கிறேன்.

உங்கள் பிரிவால் வாடும்
**மருமகள் டலிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My தாத்தா

"In the end, it's not the years in your life that count. It's the life in your years."

On the afternoon of March 6, 2016, my grandfather, my Thatha, Kathiravelu Ramanathan passed away. My last moment with my Thatha was at four in the morning where I was concerned and curious why he was sitting on his armchair this early in the morning. I spent the rest of the day work and before I came home I knew it had happened.

I have countless memories of my Thatha. But the memories of my Thatha these past few years are definitely the memories I will cherish the most. My thatha suffered from memory loss or lack of a better term, dementia. He recognized who I was and my entire family but he always seemed emotionless. Every day, I would try to get some emotion out of him asking him questions like what are you doing or what are you thinking about? He always gave me little to no response, every time I asked him. But each time I ask him I always had hope that one day he would answer like he would if he didn't have this condition.

The memories of my Thatha from when I was younger were just as good but I wish I cherished those moments with my Thatha at the time as I do now. From the days he would walk me home from school all the way back from when I was in kindergarten, to the moment when we moved into our new home and he immediately started a garden. Although, the garden was unsuccessful for the first few years his determination to keep trying after every winter was phenomenal. One year he was able to successfully grow tomatoes and I remember as a kid being mesmerized at how he accomplished this.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My Thatha tried to the best of his ability when I was kid to teach the way of growing up in Sri Lanka, back at his home. He definitely did, through my growing knowledge and ability to speak Tamil, to eating extremely spicy curry. I will always thank him for that.

At last, my Thatha was everything to me. He was the reason why I always looked forward to coming home as I grew older. He shaped me to be the man I am today and he will continue to for the rest of my life.

I know my Thatha; I know he would want me to cherish these memories. Finally, I know my Thatha will always have a place in my heart. My Thatha and I will always be connected. I love you.

***Prakas Pararajalingam***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My தாத்தா

My grandfather was a man of very few words. Although there may not have been much conversation, he was a simple man and even in his simplicity he showed me the world that I'm living in today. For the first time ever, I've had to envision a life without him. However, I want him to know that his presence itself has played such a huge role in my life. He was a man of great knowledge and greater love. Thank you for being part of my life.

My Grandpa was a humble man; he never liked to be the center of attention. In life and now in death, he wouldn't want us to focus on him. He wouldn't want us to focus on the sadness of his death, but instead focus on the happiness in our lives. He would want us to appreciate each other and our future.

Thank you, grandpa, for all you did for me over the years and everything you were.

Grandpa, I will always miss you. Your guidance and love will carry me through to the end of my days. I love you Grandpa, until we meet again.

***Prasath Pararajalingam***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# In Loving Memory Of My தாத்தா

"If the people we love are stolen from us, the way to have them live on is to never stop loving them." James O'Barr

On the afternoon of March 6th, 2016, my grandfather, a man who was always there for others, had recently passed. He was 84 years of age who had the privilege of having experienced what life has to offer for us. With each chapter he explored something new about himself and today we see him as a blessed man whom has one of the purest hearts. Once you begin to write a piece like this, you have to wind back the clock and you recognize how precious each memory is. We could never have realized that we were making memories at that time. When I began to write this, I wondered what I would even write about. I thought about it, and all I could remember were the times when my grandfather made me put one of the biggest grins on my face. My grandfather was a great man. When I think about him, the words that come to mind are: hard worker, caring, humorous, faithful, respectful and so much more. These are just a few words that come to mind, but it is impossible to summarize how extraordinary of a person he was in words.

I remembered how everyday after I came home from school, I would see him knocking on my door peeking his head out and asking me if I was okay. He always made some sort of an effort towards interacting with me. Whenever I would feel down, just seeing him be joyful would always have made my day. He is an amazing man who became a terrific father and became an even better grandfather. My Thatha had become a person who was dedicated to his family and had always put others before himself. When I was in grade 2, he was generous enough to spend his time on waiting for Prakas and I at the front entrance of my school just to pick us up. Some



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

days I guess you could say I was being an annoying 7 year old, but to him he didn't mind. I am going to miss my grandfather; his mind was so full of wisdom and love that words couldn't even begin to explain.

Being able to live with him since the day I was born has been a true honor. We had dealt with a couple of bumps during our journey but I knew I would be okay with him around. He loved to walk and he probably was the most active one comparison to our whole family. Even though the ages between us were several years apart, it didn't stop us to have a connection that was cherished between us. Albert Einstein once said, "Our death is not an end if we can live on in our children and the younger generation. For they are us, our bodies are only wilted leaves on the tree of life." I believe what he left will be continued on to us and when he looks down on us that he would know he left us in the right direction. He lived a long and happy life. Sadly this has been the end of his story but our family members can help continue it. Even though he had passed away he will always be in our hearts and he will never be forgotten. My grandfather was a great friend to me. I respected him greatly and treasured all the times we spent together. He will be missed greatly by my family and I. We love him very much and may he Rest In Peace.

***Wisenavi Jeyacumar***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்களின் வாழ்வும் மரணமும்

மரணம் என்பது ஒரு தனி மனிதனின் அனுபவம். நமது மரணத்தை நாங்கள் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். மற்றவர்களுக்கு உணர்த்த முடியாது. மரணம் என்பதன் பெறுமதி, வாழும் வாழ்க்கையை விட பெறுமதியற்றது என்பதைத் தெரியப்படுத்துவதற்கு யாரும் இறந்த பின் உயிர்ப்பதில்லை. தோன்றியவை யாவும் என்றோ ஒரு நாள் அழிந்தே ஆகவேண்டும். மரணத்தின் பின்னர் நமக்கு என்ன நடக்கும் என்பது எவருக்கும் தெரியாது. "காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா" என்று நமது உடலை பொய்யென்று கூறுகின்றார் பட்டினத்தார். காற்று என்ற ஆத்மா உடலில் இருந்து வெளியேறிவிட்டது. காயம் எனப்படும் உடல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, எரியூட்டி விடப்போகின்றனர். இதுதான் வாழ்க்கையின் முடிவு.

உடல் அழிந்தாலும் ஆன்மாவுக்கு அழிவில்லை என்கின்றது எமக்கும், இந்த உலகத்திற்குமான தொடர்பின் வலிமை. ஆன்மாவுக்கும், உறவுகளுக்கும் இடையிலான தொடர்பு நிலை நெருக்கமானது. இந்த ஆன்மா ஏற்படுத்திய உணர்வுகள் மட்டுமே என்றும் இந்த உலகில் நிலைத்திருக்கும். மற்றவை எல்லாம் வெறும் மாயைகளாக வெற்றுடலுடன் பயணித்து இடுகாட்டு நெருப்பினிலே வெந்து நீறாகிவிடும். இதனால் தான் ஆன்மாவின் இருப்பு எமக்கு அவசியமாகின்றது. நல்ல உள்ளத்துடன், வாழ்வியலில் முழுமை பெற்றவர்களாக வாழ்ந்து முடிப்பதன் மூலம் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவிற்கும், பிறப்பிற்கும் வரைவிலக்கணம் கொடுக்கின்றோம். இந்த வரைவிலக்கணத்திற்கு ஏற்புடையதாக வாழ்ந்து இறைபதம் அடைந்தவர்தான் எங்கள் சின்னையா அமரர் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்கள்.

மரணத்திலும் புன்னகை இருக்க வேண்டும் என்பதைப் போன்று, எங்கள் சின்னையாவின் இறுதிப் புன்னகையும், அவரின் நற்பண்புகளும் என்றும் எமது மனதினில் மறையாத நினைவுகளாக நிறைந்து நிற்கின்றன. பெருமதிப்புக்குரிய எங்கள் சின்னையா எம்முடன் இல்லையென்பதை உணர்ந்து கொள்ள முடியாமல், மனமெங்கும் நிறைந்திருக்கின்றீர்கள். எங்கள் மனங்களைப் பொறுத்தவரை உங்கள் உறங்காத நல்ல உள்ளம் என்றும் முடிவிலியானது. உங்கள் ஆன்ம பலத்தின் மூலம் நீங்கள் மரணத்தை வென்று விட்டீர்கள் என்பது யதார்த்தமாகின்றது.

மரணம் மனிதர்களைப் பாதிக்கின்றது என்பது உண்மை. ஆனால் பாதிப்புகளின் தன்மை மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. சின்னையாவின் இழப்பு ஏற்படுத்திய பாதிப்புகள் குடும்பம், உறவினர், சுற்றம், சமூகம் போன்ற பல தளத்திலானவை. அவரது அமைதியான குணமும், புன்னகை மாறாத முகமும், உதவிடும் மனப்பாங்கும் மகாகவி பாரதியாரின் “பார் மீது நான் சாகா திருப்பேன், காண்பீர்” என்ற மரணத்தை வெல்லும் உறுதி நிலையைக் காட்டுகின்றது. மரணம் ஒரு கணத்தில் நிகழ்ந்து முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வல்ல என்று தோன்றுகிறது. நமக்குப் பிடித்த ஒவ்வொருவரும் இறக்கும் போது, அவர்களுடன் பகிர்ந்துகொண்ட உறவின் தொன்மையும், அவர்களுடன் கைகோர்த்து சென்ற காலங்களும் மனதினில் படிந்து விடுகின்றன. முதுமையின் வருகை என்பது காலத்தின் வேகத்தைக் காட்டுவதாகவும், மரணங்களின் தொகுப்பாகவும் இருக்கிறது.

இன்பம், துன்பம் எல்லாவற்றையும் தனது மனதினுள் வைத்து அழுத்திக் கொள்ளும் இயல்புடன், புன்னகை புரிவது இவரது தனிச் சிறப்பு. இவரது மரணத்திற்கு முன்பாகவே, எமது தேசம் பற்றிய எண்ணற்ற சிந்தனைகள் அவர் மனதில் அடங்கிப்போயிருந்தன. தனது ஊர் பற்றிய நிலைப்பாடு இவரை தூரக் கனவுகளாகவே நிறுத்தியிருக்கின்றது. தவிர்க்க முடியாதுபோன தேசமாறுதல்களும், கலாச்சார சீரழிவுகளும் அவரின் சிந்தனைகளை கனேடிய தேசத்தில் புதைத்து விட்டது என்பது இவரைப் பொறுத்தவரை மட்டுமல்ல எல்லோருக்கும் பொருத்தமான ஒரு உண்மை. அவற்றை எதிர்த்துப் போராட முடியாமல் தாயக மண்ணைப் பிரிந்த சோகத்துடன் அவரது மரணமும் கனேடிய மண்ணில் எழுதப்பட்டுவிட்டது.

சின்னையாவின் மரணம் எமக்கெல்லாம் பெரும் இழப்பிற்குரியது. உறுதியான மனப்பக்குவமும். உணர்வு பூர்வமான பார்வையும், மென்மையாக வெளிப்படும் புன்சிரிப்பும், உதவிடும் மன உணர்வையும் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரிடமிருந்தது கற்றுக் கொள்ள வேண்டியவை ஏராளம். இவரது இடம் இனி எப்பொழுதும் நிரந்தரமான இடைவெளியாகவே இருக்கும். காலத்தின் பெருமதிப்பில் சின்னையாவின் வரலாற்றுப் பக்கங்கள் அழிக்கவியலாத் தன்மையுடையவையாக நிலைத்து விடுகின்றன.

ஊரெல்லாங் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடை கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே!

என்ற திருமந்திரம் எங்கள் சின்னையாவுக்கு மட்டும் பொருந்தாது என்பதற்கு அவர் வாழ்ந்த வாழ்க்கையும், அவரின் ஆன்ம பலமும், அவருடன் பயணித்த நாங்களும் சாட்சி.

சின்னையா! உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**ராஜ்மோகன் செல்லையா**
**மற்றும் குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரனின் இரங்கல்

அண்ணன் தம்பி உறவெல்லாம் ஆழ் கடலில் மூழ்கியதோ
எண்ணங்கள் எல்லாம் மணல் வீடாய் சாய்ந்ததுவோ
மண்ணில் வாழ்வெல்லாம் பொய்யாகி விட்டதையா
கண்ணான என் உடன் பிறப்பே கண்ணீர்தான் என் காணிக்கை
தென்றலென எம் முகத்தில் வீசி நின்ற காற்றல்லோ
ஒன்றல்ல இரண்டல்ல - உம்மை எண்ணி நாம் அழுவதற்கு
ஐவராய் பிறந்தோம் எப்படி எல்லாம் வாழ்ந்தோம்
அன்பனாய் நீர் எமக்கு ஆறுதல் எல்லாம் தருவீர்
இன்பமாய் நாம் வாழ்ந்த காலம் இனி என்றும் வாராதோ
துன்பமாய் எனக்கு இந்த செய்தி தனை ஏன் தந்தீர்
தூங்கி எழுவதற்குள் தூரம் சென்று விட்டீரே
துரோகம் என்ன நாம் செய்தோம் - நம்மை
துன்புற விட்டு விட்டு நீர் தூரம் சென்றதேனோ
கூறுபட வாழாது குலவி நாமும் வாழ்ந்தோம்
எமை வேறாக விட்டு விட்டு நீர் தூரம் சென்றதேனோ
அன்போடு எமக்கிருந்த அன்பான உடன் பிறப்பே
முன்பேதும் நாம் முழு நாளும் அழுததில்லை
சகோதர உடன் பிறப்பே உன்பிரிவால் வாடுகின்றேன்.

ஓம் சாந்தி, ஓம் சாந்தி, ஓம் சாந்தி



தர்மலிங்கம் மற்றும்
ஜெகநாதன் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்று வரை எம்மோடு இருந்த அண்ணல்

'பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற' என்ற குறள் மொழி கூறுவது போல் அடக்கமான பண்பும், இனிமையாகப் பேசும் இயல்பும் தவிர, ஒருவருக்குச் சிறந்த அணிகலன் வேறு இறுக்க முடியாது என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்த அண்ணல் இன்று நம்முடன் இல்லை. மனமெல்லாம் நிறைந்திருக்கும் உங்கள் உணர்வுகள், உலகுள்ள வரையும் உயிர் வாழும். நாங்கள் என்றென்றும் உங்களை உள்ளத்தில் பூசிப்போம். அமைதி கொண்டு சென்று வாருங்கள்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்.

காங்கேசு குடும்பம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் இழப்பும் இருப்பும்!

அன்பின் பிறப்பிடமே பண்பின் நிறை குடமே
ஆல் போல் தளைத்து நிழல் தந்தீரே
இதயத்தில் எவருக்கும் இடர் எண்ணாதவரே
எல்லோரும் இன்புற்று வாழ்தல் வேண்டு மென்பீரே
அருகிலிருக்கின்றீர் என அக மகிழ்ந்தோம்
உந்தன் பிரிவால் இல்லமும் இருள்ளாகியதே
இனி எப்பிறப்பில் காண்போம்
மறைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்தோம்
மண்ணுலகை விட்டு மறைந்து விட்டது
நின் உருவம்
விண்ணோடு நீங்கள் சென்று கலந்து விட்டாலும்
விட்டு அகலாது என்றும் உங்கள் நினைவு.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

**சண்முகரத்தினம் - காமாட்சி குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திரு. கதிரவேலு அவர்கள் எனது நெருங்கிய உறவினர்.

சிறிது காலம் சுகவீனமுற்று இருந்தாலும் நீண்ட காலம் வாழக்கூடிய ஒரு பக்குவ நிலையில் வாழ்ந்து வந்தார். திடீர் என்று கேட்ட அவரது மரணச் செய்தி எங்களுக்கு ஒரு மன அதிர்ச்சியைத் தந்தது.

பிறப்பும், இறப்பும் இயற்கையின் நியதி எனினும் இறப்புகள் ஈடு செய்ய முடியாத இழப்புகள் ஆகி விடுகின்றன. அந்தவகையில் தெய்வ பக்தியும் அன்பும் பண்பும் திடமனமும் கடமை உணர்வும் உலகத்தோடொத்த ஒழுகும் மாண்பும் மனைவி மக்கள் மருகர் பேரர் உறவு சுற்றம் ஓம்பிடும் பாசமும் ஒழுக்கமும் நேர்மையும் உண்மையும் செம்மையும் கடமை கண்ணியம் கட்டுப்பாடுடன் மனித நேயம் கொண்ட மனிதராக வாழ்க்கையை சிறப்புடன் வாழ்ந்தவர்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடையாய்"
இவ் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகி விட்ட அமரர் திரு. கதிரவேலு அவர்கட்கு கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

திருமதி இராஜேஸ்வரி
கந்தையா குடும்பத்தினர் நெடுந்தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியப்பா

பெற்றெடுத்த மகளைப்போல் அரவணைத்தீர்கள். அப்பா இல்லை என்ற குறை நீக்கி, அப்பாவாய் உடன் இருந்து என் பிள்ளைகளுக்கு அன்புத் தாத்தாவாய், அன்புக்குரிய மாமாவாக இருந்தீர்கள்.

என்றும் இருப்பீர்கள் என எதிர்பார்த்தோம், ஆனால் இப்போ நீங்களும் எங்களைப் பாதியில் விட்டுவிட்டு போய்விட்டீர்களே பெரியப்பா. ஒவ்வொரு முறையும் வீட்டுக்கு வரும்போதெல்லாம் எங்களை சிரித்த முகத்துடன் வரவேற்று சாப்பிடச் சொல்லி பரிமாறுவீர்களே!

பெரியப்பா!

ஏதோ எம்மையறியாமல் உங்கள் பாசம் எங்களை குடும்ப தினத்தன்று கடைசியாக பார்ப்பதற்கு அழைத்திருந்தது.

அன்று கூட சாப்பிட்டு போங்கள் என்று சொன்னீர்களே பெரியப்பா.

இனி அப்பாவுக்கு அப்பாவாக உங்களை போல் பாசமாக அரவணைக்க யாருமில்லையே பெரியப்பா.

உங்கள் அழகான புன்சிரிப்பும் பொறுமையான பேச்சும் எம்மை விட்டு போய்விட்டதே பெரியப்பா

அன்பால் எதையும் வெல்லலாம் என்று நிறுவித்து, வாழ்ந்து விட்டு இறைவனடி சேர்ந்து விட்டீர்கள். நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு ஒருபோதும் மறையாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் ஏங்கும் பெறாமகள்.

**செல்லா குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிரவேலு மாமா

எங்கள் அன்பு கதிரவேலு மாமா இந்த உலகை விட்டு உயிர் நீத்தார். புல்லும் நோகாத நடை போல ஒரு இனிய நல் வாழ்வில் வாழ்ந்து மறைந்தார். பட்டும் படாது உலக வாழ்வில் பஞ்சுபொதி போன்ற மெல்லிய மனத்தான்.

என் அப்பாவின் அன்புத்தங்கை முத்துப்பிள்ளை மாமியை மணந்து அருமைக் குழந்தைகள் பேரர்கள் தழைக்க இன்சொல் புன்முறுவல் அன்றி அவர் முகத்தில் வேறொன்றும் கண்டிலேன். பிறரை நோக ஒரு வார்த்தை எப்பொழுதும் கேட்டிலோம். இல்லறத்தில் வாழ்ந்து மறைந்த ஒரு ஞானியைப் போல் அவரை நினைக்கத்தோன்றும்.

"பிறப்பவர்க்கெல்லாம் இறப்புமுண்டு இப்பூமியிலே. பேதமின்றி ஆருண்டு ஊரினிலே" அவர் பொன் உடல் மறைந்தாலும் அவர் எம்மில் விட்டுசென்ற இனிய நினைவுகள் என்றும் எம்மோடு இருக்கும். "எங்கள் அன்பு மாமா இனிமையான உங்கள் வாழ்வுக்கு நாம் எப்பொழுதும் தலை வணங்குகிறோம் என்றும் எங்கள் மனதில் வாழும் நல்ல உறவு நீங்கள்" அன்பு மாமி மச்சாள்மார் மச்சான்மார் மருமக்கள் யாவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்கள்.



கிருபா பிள்ளை
நியூயோர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மாமா

வெள்ளை சேட்டும் வேட்டியும்,
இரு உன் பாதங்கள் ஊன்றி உருண்ட சக்கரமும்,
கல்லும், குழியும், முள்ளும், மண்ணும், தேடுதே..
என் கதிரவேலு மாமாவை

மருமகன்
**நாகேந்திரா கந்தையா**
**டென்மார்க்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மண்ணில்
10- 01-1932

விண்ணில்
06-03-2016

## திரு. இராமநாதர் கதிரவேலு

யாழ். நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திரு. இராமநாதர் கதிரவேலு (ஓய்வு பெற்ற யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்) அவர்கள் பங்குனி 06இ 2016 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ் சென்றவர்களான இராமநாதர் பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரர் நாகமுத்து தம்பதிகளின் அருமை மருமகனும், முத்துப்பிள்ளை (கனடா) அவர்களின் அன்புக்கினிய கணவரும்,
தங்கராணி (ராணி - கனடா), யோகநாதன் (யோகன் - நோர்வே), சத்தியராணி (கௌரி - கனடா), கிரிதரநாதன் (கண்ணன் - கனடா), குகநாதன் (குகன் - நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பரமேஸ்வரி, யோகம்மா ஆகியோரின் அன்புத் தாய்மாமனும், காலஞ்சென்ற இராஜரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) மற்றும் தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்),காலஞ்சென்ற ஆறுமுகம் (ஓய்வுபெற்ற மிருக வைத்தியர்), காலஞ்சென்ற செங்கமலம் அவர்களின் அன்புச் சகோதரரும், பரராஜலிங்கம் (லிங்கம் - கனடா), மாரிட் (நோர்வே), ஜெயக்குமார் (கனடா), ஷாமினி (கனடா), லலிதா (நோர்வே) ஆகியோரின் பிரியமுள்ள மாமனாரும்,

பிரசாத், பிரகாஷ், வைஷ்ணவி, ஹரன்சியா, பிரவீன், பிரசான் ஆகியோரின் பேரன்புப் பேரனும்,

காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் முத்துப்பிள்ளை, காலஞ்சென்ற சோதிமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகம்மா, காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற யோகம்மா மற்றும் கண்மணி, பசுபதிப்பிள்ளை, பேரம்பலம், காமாட்சி, தனபாக்கியம், விஜயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

காலஞ்சென்ற செல்லையா, காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் கணபதிப்பிள்ளை, சண்முகரட்ணம், முத்துக்குமார் ஆகியோரின் சகலனும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற மேரி சபீனா மற்றும் தனலட்சுமி, பேரின்பதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் 8911 Woodbine Ave. இல் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home இல் March 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணியில் இருந்து 9 மணி வரையும், மறுநாள் March 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியில் இருந்து 8.30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி வரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு, பின்னர் 8.30 மணி முதல் 10.15 மணி வரை சைவசமய சடங்குகள் நடைபெற்று, 12492 Woodbine Ave. இல் அமைந்துள்ள Highland Hills Crematorium இல் காலை 11 மணிக்குத் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.


தகவல்: குடும்பத்தினர்
தொலைபேசி: 905 642 6491
லிங்கம் (மருமகன்): 416 625 3635
கண்ணன் (மகன்): 647 300 8884
யோகன் (மகன்): 47 970 69 450
குகன் (மகன்): 47 902 17 795
ஜெயக்குமார் (மருமகன்): 647 972 2167





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியவர் மரித்தாலும் மக்கள் மனதைவிட்டகலார்



## அமரர்:திரு இராமநாதர் கதிரவேலு

(ஓய்வுபெற்ற போதனா வைத்தியசாலை ஊழியர்- யாழ்ப்பாணம்)

தோற்றம்:10-01-1932****மறைவு: 06.03.2016

அமரர்:திரு இராமநாதர் கதிரவேலு அவர்கள் நெடுந்தீவில் பிறந்து யாழ் வைத்தியசாலை ஊழியராக கடமையாற்றிய காலத்தில் தீவக, நல்லூரடி, மக்களாலும் மற்றும் கனடாவில் வாழ்ந்த காலங்களில் உற்றார் உறவினர் நண்பர்களாலும் பெரிதும் மதிப்புடையவராய் போற்றப்பட்டவர் அவர்களின் குடும்பத்தில் பொறுப்பானவராகவும் மனைவி பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மீது அன்பு கொண்டவராய் இருந்து எமது நெடுந்தீவு மக்கள் ஒன்றிய நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்து ஒன்றிய வளர்ச்சிக்கு நட்பாங்கான பிள்ளைகளையும் உறவுகளையும் தந்து சமூகத்தில் எல்லோரும் போற்றும் நற்குணமுடையவராய் பெருமையோடு இலங்கையிலும் கனடாவிலும் சிறப்புற வாழ்ந்து இவ்வுலகெய்தியதால் நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா உணர்வோடு கண்ணீரை அவர் பாதங்களில் காணிக்கைசெய்கின்றது.

புவியில் நெஞ்சிற்கு நிறைவாய் வாழ்ந்தவர்
மரணத்தால் மறக்கப்படுவதில்லை

அமரர்:திரு இராமநாதர் கதிரவேலு அவர்களின் மனைவி பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்களோடு அனுதாபத்தை பகிர்ந்து கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

Delft People Cultural Organization Of Canada
நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பண்பாட்டுச் சிகரமெனப்பைந்தமிழர்
போற்றுகிற பசுத்தீவு பெற்றமகனே!
நண்பான உறவோடு நலமான வாழ்கையில்
நடைபோட்டு வென்றமகனே!
விண்ணோரின் அழைப்பிலோ விடைபெற்றுச் சென்றனை
விம்மிவிழும் நெஞ்சமுடனே கண்சோரும் நீர்பாயக்
கவலையில் உறவுகள் கதறுதல் காணவிலையோ!
வன்சொலால் என்றைக்கும் வாய்தவறிக் கூடவொரு
வார்த்தையே கூறாதவன் இன்சொலால் இலகாக
இதயத்தை ஈர்க்கின்ற இனிதான பண்பானவன்!
புன்னகை பூக்கின்ற பொலிவான முகத்துளே
புனிதமாய் மனதுவைத்தோன் அன்பான மனையாளை
அழகான குடும்பத்தை அழவைத்தச் சென்றதேனோ!
கனிவான மொழியினன் கபடற்ற நெஞ்சினன்
கதிர்வேலன் பெயரானவன்! இனிதான பண்பினன்
இரங்குமோர் மனத்தினன் இன்றலர் மலரானவன்!
பனிவீழும் நாட்டிலும் பண்போடு அன்போடு
பழகியே உறவானவன் நனிதான நாயகன்
நற்றாள்கள் சேர்ந்தனன் நாளெலாம் அமைதிபெறவே!

அமரர் திரு. இராமநாதர் கதிரவேலு அவர்களின் பிரிவாற்றாது துயருறும் அன்னாரின் மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

**திரு. ஐ. சண்முகரத்தினம்(சகலன்),**
**திருமதி. ச. காமாட்சி(மைத்துனி) குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை எதிலே ஓடிக்கொண்டிருக்கிறது? ஆசையிலும் நம்பிக்கையிலுமே ஓடிக்கொண்டிருக்கிறது. சராசரி மனிதனை ஆசைதான் இழுத்துச் செல்கிறது. துக்கத்துக்கெல்லாம் அதுவே காரணமாகிறது. 'வேண்டும் என்றகிற உள்ளம் விரிவடைந்து கொண்டே போகிறது. 'போதும்' என்ற மனம் சாகும்வரை வருவதில்லை. ஐம்பது காசு நாணயம் பூமியில் கிடந்து, ஒருவன் கைக்கு அது கிடைத்துவிட்டால், வழிநெடுக நாணயம் கிடைக்கும் என்று தேடிக்கொண்டே போகிறான். ஒரு விஷயம் கைக்குக் கிடைத்துவிட்டால் நூறு விஷயங்களை மனது வளர்த்துக்கொள்கிறது. ஆசை எந்தக் கட்டத்தில் நின்றுவிடுகிறதோ, அந்தக் கட்டத்தில் சுயதரிசன் ஆரம்பமாகிறது. சுயதரிசன் பூர்த்தியானவுடன், ஆண்டவன் தரிசன் கண்ணுக்கு தெரிகிறது.

ஆனால் எல்லோராலும் அது முடிகிறதா?

லட்சத்தில் ஒருவருக்கே ஆசையை அடக்கும் அல்லது ஒழிக்கும் மனப்பக்குவம் இருக்கிறது. என் ஆசை எப்படி வளர்ந்ததன்று எனக்கே நன்றாகத் தெரிகிறது. சிறுவயதில் வேலையின்றி அலைந்தபோது "மாதம் இருபது ரூபாயாவது கிடைக்கக்கூடிய வேலை கிடைக்காதா" என்று ஏங்கினேன். கொஞ்ச நாளில் கிடைத்தது. மாதம் இருப்பத்தைந்து ரூபாய் சம்பளத்திலே ஒருபத்திரிகையில் வேலை கிடைத்தது.

ஆறு மாதம்தான் அந்த நிம்மதி.

"மாதம் ஐம்பது ரூபாய் கிடைக்காதா?" என்று மனம் ஏங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் கிடைத்தது. வேறொரு பத்திரிகையில் பிறகு மாதம் நூறு ரூபாயை மனது அவாவிற்று. அதுவும் கிடைத்தது. மனது ஐநூறுக்குத் தாவிற்று. அது ஆயிரமாக வளர்ந்தது. ஈராயிரமாகப் பெருகிற்று. யாவும் கிடைத்தன. இப்பொழுது நோட்டடிக்கும் உருமையையே மனது கேட்கும் போலிருக்கிறது!

எந்க கட்டத்திலும் ஆசை பூர்த்தியடையவில்லை.

'இவ்வளவு போதும்' என்று எண்ணுகின்ற நெஞ்சு, 'அவ்வளவு' கிடைத்ததும், அடுத்த கட்டத்திற்குத் தாண்டுகிறதே, ஏன்?

அதுதான் இறைவன் லீலை!

ஆசைகள் அற்ற இடத்தில், குற்றங்கள் அற்றுப் போகின்றன. குற்றங்களும், பாபங்களும் அற்றுப்போய் விட்டால் மனிதனுக்கு அனுபவங்கள் இல்லாமற் போய் விடுகின்றன. அனுபவங்கள் இல்லையென்றால், நன்மை தீமைகளைக்கண்டுபிடிக்க முடியாது. ஆகவே தவறுகளின் மூலமே மனிதன் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இறைவன் ஆசையைத் தூண்டிவிடுகிறான்.

ஆசையை மூன்றுவிதமாப் பிரிக்கிறது இந்து மதம்.

**மண்ணாசை!**

**பொன்னாசை!**

**பெண்ணாசை!**

மண்ணாசை வளர்ந்துவிட்டால், கொலை விழுகிறது.

பொன்னாசை வளர்ந்துவிட்டால், களவு நடக்கிறது.

பெண்ணாசை வளர்ந்துவிட்டால், பாபம் நிகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மூன்றில் ஓர் ஆசைகூட இல்லாத மனிதர்கள் மிகவும் குறைவு. ஆகவேதான், பற்றற்ற வாழ்க்கையை இந்து மதம் போதித்தது. பற்றற்று வாழ்வதென்றால், எல்லாவற்றையும் விட்டு விட்டு ஓடிப்போய் சந்நியாசி ஆவதல்ல! "இருப்பது போதும் வருவது வரட்டும் போவது போகட்டும் மிஞ்சுவது மிஞ்சட்டும்" என்று சலனங்களுக்கு ஆட்படாமலிருப்பதே பற்றற்ற வாழ்க்கையாகும். ஆசை, தீமைக்கு அடிப்படையாக இல்லாதவரை, அந்த ஆசை வாழ்வில் இருக்கலாம் என்கிறது இந்து மதம். நான் சிறைச்சாலையில் இருந்தபோது கவனித்தேன். அங்கே இருந்த குற்றவாளிகளில் பெரும்பாலோர் ஆசைக் குற்றவாளிகளே. மூன்று ஆசைகளில் ஒன்று அவனைக் குற்றவாளியாக்கியிருக்கிறது. சிறைச்சாலையில் இருந்து கொண்டு, அவன் "முருகா, முருகா!" என்று கதறுகிறான். ஆம், அவன் அனுபவம் அவனுக்கு உண்மையை உணர்த்துகிறது.

அதனால்தான் "பரம்பொருள் மீது பற்று வை நிலையற்ற பொருள்களின் மீது ஆசை வராது" என்கிறது இந்துமதம்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" – என்பது திருக்குறள்.

ஆசைகளை அறவே ஒழிக்க வேண்டியதில்லை.அப்படி ஒழித்துவிட்டால் வாழ்க்கையில் என்ன சுகம்? அதனால்தான் 'தாமரை இலைத் தண்ணீர் போல்' என்று போதித்தது இந்து மதம். நேரிய வழியில் ஆசைகள் வளரலாம். ஆனால் அதில் லாபமும் குறைவு. பாபமும் குறைவு. ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்த்து ஐநூறு ரூபாய் மட்டுமே கிடைத்தால், நிம்மதி வந்து விடுகிறது. எதிர்பார்ப்பதைக் குறைத்துக்கொள் "வருவது மனதை நிறைய வைக்கிறது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே இந்துக்கள் தத்துவம்.

எவ்வளவு அழகான மனைவியைப் பெற்றவனும், இன்னொரு பெண்ணை ஆசையோடு பார்க்கிறானே, ஏன்? லட்சக்கணக்கான ரூபாய் சொத்துக்களைப் பெற்றவன் மேலும் ஓர் ஆயிரம் ரூபாய் கிடைக்கிற தென்றால் ஓடுகிறானே, ஏன்? அது ஆசை போட்ட சாலை.

அவன் பயணம் அவன் கையிலில்லை ஆசையின் கையிலிருக்கிறது. போகின்ற வேகத்தில் அடி விழுந்தால் நின்று யோசிக்கிறான், அப்போது அவனுக்கு தெய்வஞாபகம் வருகிறது. அனுபவங்கள் இல்லாமல் அறிவின்மூலமே, தெய்வத்தைக் கண்டு கொள்ளும்படி போதிப்பதுதான் இந்து மதத் தத்துவம். 'பொறாமை, கோபம்' எல்லேமே ஆசை பெற்றெடுத்த குழந்தைகள்தான். வாழ்க்கைத் துயரங்களுக்கெல்லாம் மூலகாரணம் எதுவென்று தேடிப் பார்த்து, அந்தத் துயரங்களிலிருந்து உன்னை விடுபடச் செய்ய, அந்தக் காரணங்களைச் சுட்டிக் காட்டி, உனது பயணத்தை ஒழுங்குபடுத்தும் வேலையை, இந்து மதம் மேற்கொண்டிருக்கிறது.

இந்து மதம் என்றும் சந்நியாசிகளின் பாத்திரமல்ல.

அது வாழ விரும்புகிறவர்கள், வாழ வேண்டியவர்களுக்கு வழிகாட்டி.

வள்ளுவர் சொல்லும் வாழ்க்கை நீதிகளைப் போல இந்து மதமும் நீதிகளையே போதிக்கிறது. அந்த நீதிகள் உன்னை வாழவைப்பதற்கேயல்லாமல் தன்னை வளர்த்து கொள்வதற்காக அல்ல. உலகத்தில் எங்கும் நிர்பந்தமாக, வெண்மையாக, தூய்மையாக, இருக்கிறது என்றதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளமாகவே அது 'திருநீறு' பூசச் சொல்லுகிறது. உன் உடம்பு, நோய் நொடியின்றி ரத்தம் சுத்தமாக இருக்கிறது என்பதற்காகவே, 'குங்குமம்' வைக்கச் சொல்கிறது. 'இவள் திருமணமானவள்' என்று கண்டுகொண்டு அவளை நீ ஆசை-யோடு பார்க்காமலிருக்கப் பெண்ணுக்கு அது 'மாங்கல்யம்' சூட்டுகிறது. தன் கண்களால் ஆடவனுடைய ஆசையை ஒருபெண் கிளறிவிடக்கூடாது என்பதற்காகவே, அவளைத் 'தலைகுனிந்து' நடக்கச் சொல்கிறது.

கோவிலிலே தெய்வ தரிசனம் செய்யும்போது கூட கண் கோதையர்பால் சாய்கிறது. அதை மீட்க முடியாத பலவீனத்துக்கு, அவள் சிரித்துவிட்டால் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதுபோல் ஆகிறது. "பொம்பளை சிரிச்சா போச்சு புகையிலை விரிச்சாப் போச்சு" என்பது இந்துக்கள் பழமொழி. கூடுமானவரை மனிதனைக் குற்றங்களிலிருந்து மீட்பதற்கு, தார்மீக வேலி போட்டு வளைக்கிறது இந்துமதம். அந்தக் குற்றங்களிலிருந்து விடுபட்டவனுக்கே நிம்மதி கிடைக்கிறது. அந்த நிம்மதியை உனக்கு அளிக்கவே இந்துமதத் தத்துவங்கள் தோன்றின.

இன்றைய இளைஞனுக்கு ஷேக்பியரைத் தெரியும் ஷெல்லியைத் தெரியும் ஜேம்ஸ்பாண்ட் தெரியும். கெட்டுப்போன பின்புதான் அவனுக்குப் பட்டினத்தாரைப் புரியும்.

ஓய்ந்த நேரத்திலாவது அவன் ராமகிருஷ்ண மரமஹம்சரின் உபதேசங்களைப் படிப்பானானால், இந்து மதம் என்பது வெறும் "சாமியார் மடம்" என்ற எண்ணம் விலகிவிடும்.


நியாயமான நிம்மதியான வாழ்க்கையை நீ மேற்கொள், உன் தாய் வடிவில் துணை வருவது இந்துமதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைகளைப்பற்றி பரமஹம்சர் என்ன கூறுகிறார்? "ஆழமுள்ள கிணற்றின் விளிம்பில் நிற்பவன், அதனுள் விழுந்துவிடாமல் எப்போதும் ஜாக்கிரதையாக இருப்பதைப்போல் உலக வாழ்க்கையை மேற்கொண்டவன் ஆசாபாசங்களில் அமிழ்ந்து விடாமல் இருக்க வேண்டும்" என்கிறார். "அவிழ்த்து விடப்பட்ட யானை, மரங்களையும் செடிகொடிகளையும் வேரோடு பிடுங்கிப் போடுகிறது. ஆனால் அதன் பாகன் அங்குசத்தால் அதன் தலையில் குத்தியதும், அது சாந்தமாகி விடுகிறது. அது போல, அடக்கியாளாத மனம் வீண் எண்ணங்களில் ஓடுகிறது" "விவேகம் என்ற அங்குசத்தால் அது வீழ்த்தப்பட்டதும் சாந்தமாகி விடுகிறது". என்றார். அடக்கியாள்வதன் பெயரே வைராக்யம். நீ சுத்த வைராக்கியனாக இரு. ஆசை வளராது. உன்னைக் குற்றவாளியாக்காது, உன் நிம்மதியைக் கெடுக்காது.

நன்றி :- **கவிஞர் கண்ணதாசன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில்
10.01.1932

விண்ணில்
06.03.2016

## அமரர். திரு. இராமநாதர் கதிரவேலு

(ஓய்வுபெற்ற போதனா வைத்தியசாலை ஊழியர் – யாழ்ப்பாணம்)

யாழ். நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட இராமநாதர் கதிரவேலு அவர்கள் 06-03-2016 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்தார்.

இவர் சிறந்த குடும்பத் தலைவராகவும், சிறந்த மனித நேயம் கொண்டவராகவும், நெடுந்தீவு வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைகளில் கடமை ஆற்றிய போது அனைத்து மக்களுக்கும் தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் வழங்கியதுடன், உற்றார், உறவினர், நண்பர்களை மதித்து நடக்கும் பண்பாளனாய் விளங்கினார் என்பதையும் நாம் இங்கு நினைவு கூருகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருறும் மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும்
உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு
அவர்களின் துயரிலும் பங்குபற்றிக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா
OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS - CANADA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம்
# உயிருக்கல்ல – உடலுக்கு மட்டும்.

மனித இனத்தின் மறு மலர்ச்சி
புனித பயணத்தின் ஆரம்ப தினம்
வாழ்ந்த நாட்களை மேடை ஏற்றும் அரங்கு
வாழ்க்கை நாடகத்தின் இறுதிப் பாகம்
நேற்று நீ நீயாக வாழ்ந்தாய்
இன்று நீ நீயாக இல்லை
நாளை நீ இருந்த இடமே இல்லை
பின்பு என்ன இங்கே தங்கப்போகிறது ?

நீ நடந்து சென்ற பாதை நீ நடத்தி வைத்த கீதை
நீ தொடக்கி வைத்த சேவை நீ முடித்து வைத்த வேள்வி
இதில் என்ன செய்தாயோ அது உன்னை வாழவைக்கும்
அதில் என்ன இருந்ததோ அது உன் நினைவை மீட்டும்.
எதில் நீ நீயாக வாழ்ந்தாயோ அது உன்னை உயர வைக்கும்.
பதில் இல்லையெனில் நீ வாழவே இல்லை என்றுரைக்கும்

மானிட பிறவியில் உன் மனிதம் நிலைக்கவேண்டும்
தானிடம் மட்டும் நீ தனியாக வாழ்ந்தாயானால்
போன இடம் தெரியாமல் உன் பெயர் அழிந்துபோகும்
உன் உடல் எரிந்துபோனதுபோல் எதுவுமே இல்லாமல்போகும்
கல் ஒன்றை எடுத்து ஓரமாய் போடும்போது
அது அடுத்தவன் காலில் படாதுவாறு போட்டுவை
நெல் ஒன்றை எடுத்து வயலில் போடும்போது
அது அடுத்தவன் கண்களில் படும்படி போட்டு வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல் ஒன்றை எடுத்து வெளியே விடும்போது
அது அடுத்தவர் மனங்களை நோகும்படி துப்பிவிடாதே
செயல் ஒன்றை செய்யும்போது அது
அடுத்தவர் வாழ்வோடு ஒன்றிடச்செய்
உறவோடு நீ உறவாடும்போது நல்
மனதோடு அதை நீ மாற்றிக்கொள்
பலரோடு நீ நிழலாடும்போது உன்
நிஜத்தோடு அவர்களிடம் நிழலாடு
மனதாலே உன் இதயத்தை மற்றவரிடம் மாற்றிக்கொள்
அதனாலே இதயங்கள் அங்கங்கே இடம்மாற்றி வாழ்ந்துகொள்
எதனாலே இதயங்கள் இடி தாங்கின எனதினமும்
மனதாலே நினைத்து மாற்றிக்கொள்
இன்றைய நாட்கள் அல்ல
இந்த வினாடிதான் உன் வாழ்வின் நிஜம்
நேற்றைய நாட்களல்ல
இந்த நொடிதான் உன் சுவாசம் இயங்கும் நாழி
நல்லதை நீ மட்டும் உண்டுவிட்டு
நாற்றத்தை சமூகத்திடம் விட்டுவிடாதே
உள்ளதை உன்னிடத்தில் முடக்கிவிட்டு
முள்ளதை மனங்களுக்கு குத்திவிடாதே
எள்ளது உன் கையில் இருந்தாலும் அதை
எட்டாகப்பிரித்துண்டு சேர்ந்து வாழு
எறும்பதும் தன் கையால் எண் சாண் எனும்போது
ஆறடி மானிடம் நீ இதயங்களை ஆளவேண்டாமா
பிறந்தது நீ மட்டும் வாழ அல்ல
சிறந்தது மானிட வாழ்வு ஒருவருக்கல்ல
பரந்த பூமியில் எந்த உயிரும் வருந்துவதற்கல்ல
என்பதை நீ உணர்ந்திடு இது பொய்யல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் நீயும் நாமாக வாழ்ந்து
தாயும் சேயும் நலமாக இணைந்து
அக்கமும் பக்கமும் அழகாக பேசி
துக்கமும் துயரமும் பகிர்ந்து வாழ்வோம்
துடிக்கும் ஓருயிர் உன் கண்களில்
துளிநீரை இரைக்கவேண்டும்வெடிக்கும்
இதயத்தின் ஓசை உன் நாடித்துடிப்பை
உடைக்கவேண்டும்
படிக்கும் ஒவ்வோர் பாடமும் உன்னால்
பதியம் போட்டு வைக்கவேண்டும்
உன் பின்னே வரும் உறவுகள்
உன் பாதம் தொடர்ந்து செல்லவேண்டும்
நீ கட்டி வைத்த நல்ல படிமம்கள்
அவர்கள் தீட்டிய புத்தியாக மிளிரவேண்டும்
நீ ஊண்றிய விதையில் இருந்த எழுந்த விருட்சம்
எதிர்வரும் சமுதாயம் நிழல் பெறவேண்டும்
நீ தோண்டிய நீரூற்று
எதிர்வரும் ஏழைகளின் தாகம் தீர்க்வேண்டும்
நீ தோண்டி வைத்த குழி
எதிர்காலத்தில் தங்கமாக குவிக்கவேண்டும்
நீ போட்டு வைத்த கோடு
எதிர்கால சந்ததிக்கு வழிகாட்டியாக நிலைக்கவேண்டும்
நேற்றும் நீ இங்கு வந்துபோனாய்
இன்றும் நீ இங்கு வந்துள்ளாய்
நாளையும் வரவுள்ளாய்
எப்படி ? அதனை நீ அறிவாயா
வந்து பார்த்துவிட்டு போய்விடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எதனையாவது மனதுள்
சேர்த்துக்கொண்டு போவாயா?
இந்த நேரம் உன் கைகளில் வாழ்வுமுண்டு
இந்த வரைவுமுண்டு
உண்டு உண்டு காலத்தை வீணாக்கிஇருந்தால்
உற்றம் சுற்றத்தை முற்றம் மிதிக்க விடாது இருந்தால்
கற்றதை நினைவில் நிறுத்து மற்றது தானாக இடம்பெறும்.
மானிடமே நீ வாழப்பிறந்தநீ
மற்றவர்களையும் வாழ வைக்க பிறந்த நீ
நீ மட்டும் வாழ்ந்தாயானால் நிழல்கூட அற்றுப்போய்விடும்
மற்றவர்களையும் வாழ வைத்தாயானால்
அவர்கள் உன் நிலையை நிலைநிறுத்துவார்கள்.
மானிடமே ! வாழ்க்கையை வாழ்ந்து முடி
முடிவை உன் வாழ்வு தாங்கிக்கொள்ளும்
தொடக்கத்தை இன்றே தொடங்கி வை
முடிவுக்குள் முடிவு உன்னை நோக்கி வரும்.
இன்று எம்மை விட்டுப்பிரிந்த உடல்
எமக்கு பாதை காட்டி விட்டு செல்கின்றது
என்பதை அறிவாய மானிடமே
காலை தூக்கம் கலையுமுன்னே
காலன் ஓலை கதவில் தொங்கும் வேளை
எத்தனை உடல்களின் ஏக்கத்திற்க்கு உள்ளாகின்றது
நல்லது என்னவென்று நீயே முடிவு செய்
அதனை அன்றே செய்து முடி
நாளை நாளை என்று எதனையும் தள்ளிப்போட்டு
உன் வாழ்நாளை குறைத்துக்கொள்ளாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ சுவாசிக்க ஒரு நொடி போதுமானது
அந்த சுவாசத்தை வெளியே விட ஒரு நொடி போதுமானது

அது எப்போது நடக்கும் என்பது எந்த நொடியிலும்
உன்னால் அறிய முடியாதது.

இருக்கும் நொடிப்பொழுதை மனம் கனக்க வைக்காதே
மனதுள் துடிக்கும் நெடிப்பொருளை அதனுள் தேக்கி வாழாதே
நாற்றம் கொண்ட எண்ணங்களுக்கு மாற்றம் கொடு
ஏற்றம் உனக்கு மட்டுமல்ல மனித வாழ்வுக்கும்தான்

நீ சுவாசிக்கும் காற்றுக்கு விசுவாசமாயிரு
உன் சுவாச காற்று
அடுத்தவர் சுவாசத்தை வெப்பத்துள் தள்ளாது பார்த்துக்கொள்
உன் பார்வை
மற்றவர் பாதைக்கு வழிகாட்டியாக வைத்துக்கொள்
உன் வார்த்தை கேட்கும் இதயங்களுக்கு
ஏற்றம் கொள்ள சொல்லி வை

மானிடமே! அனைவரும் ஒருநாள்
அற்ற உயிரின் உடலாக மாறப்போகின்றோம்
நேற்றிருந்தோர் இன்றில்லை
இன்றிருப்போர் நாளை இருப்பரோ
இது திண்ணமில்லை

இந்த நிலையற்ற உயிரை சுமந்த உடலை
நாளை நான்குபேர் சுமக்க நேரிடும்
அந்த நான்கு பேர் சுமக்கும் உடல்
நாற்றம் கொண்டதாக இருந்துவிடக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றுப்போன உடலை ஆற்ற வருவோர்
நேற்று வந்தபோனவர்கள்தான்

ஆனால் இந்த காற்றுப்போன உடலும்
நேற்று காற்றோடு வந்துபோனதுதான்

காற்றில் உயிரை வைத்துவிட்டு
நான்தான் நேற்றும் இன்றும் நாளையும் என்று
மாற்றுக் கருத்து உரைக்கும் மனங்களே
வாசம்கொண்டு வாழ்ந்துகொள்ளுங்கள்
சுவாசம் நின்றுபோகுமுன்னே ஏதும் விடுபட்டு இருந்தால்
இந்த வினாடி உங்களுக்காக தரப்பட்டதை நினைவில் நிறுத்துங்கள்.
அடுத்தவர் வாழ்வையும் நேசிக்கும் மனிதம்.

மரணம் பற்றி
**கவிஞர் வைரமுத்து**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாள்சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டிய தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றிய தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் உருசியுள்ள
தேனே திரவியமே செல்வத் திரவியப்பூ
மானே எனஅழைத்த வாய்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு

முன்னை இட்ட தீ முப்புறத்திலே
பின்னை இட்ட தீ தென்இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்கமூள்கவே

வேகுதே தீயதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை

வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்

வீற்றிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றென்றும் மறவா நன்றி நவிலல்

"நன்றி மறப்பது நன்றன்று" வாழ்வாங்கு வாழ்ந்து எமக்கு வழிகாட்டியாய், அன்பின் சிகரமாய், அமைதியின் இருப்பிடமாய், புன்னகையின் உறைவிடமாய் விளங்கிய எம் தலைவன் திரு. கதிரவேலு இராமநாதர் அவர்கள் அமரத்துவமடைந்த செய்திகேட்டு விரைந்து வந்து எமக்கு ஆறுதல் கூறியும், பற்பல உதவிகள் புரிந்தும் வந்த உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எம் சோகத்தில் பங்குகொண்ட உள்நாட்டு, வெளிநாட்டு அனுதாபிகளுக்கும், அஞ்சலி மண்டபத்திற்கு நேரில் வந்து இறுதி அஞ்சலி செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய பெருமக்களுக்கும், மரணச் செய்தியை தக்க நேரத்தில் வெளியிட்ட லங்காசிறி, TVI மற்றும் கீதவாணி ஊடகத்தினருக்கும், உதயன் பத்திரிகை நிர்வாகிகளுக்கும், அன்னாரின் திருவுருவப் படங்களை தயாரித்த Focus digital studios நிறுவனத்தினருக்கும், இம்மலரை அழகுற அச்சமைத்து தந்த Brightsun பதிப்பகத்தினருக்கும், உணவு வழங்கி எம்மைத் தேற்றியவர்களுக்கும், ஈமக்கிரியை, அந்தியேட்டி முதலிய கிரியைகளை நடாத்திய அந்தணப் பெருமக்களுக்கும், அஞ்சலி நிகழ்வுகளில் பங்குபற்றியோருக்கும், எம் உளமார்ந்த நன்றியையும், பணிவான வணக்கத்தையும் நெஞ்சார தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்

இராமநாதர் + பார்வதிப்பிள்ளை

- இராஜரட்ணம் + செல்லம்மா
- தர்மலிங்கம் + முத்துப்பிள்ளை
- **கதிரவேலு**
- ஆறுமுகம் + சோதிமணி
- செங்கமலம் + பேரம்பலம்

நாகேந்திரர் + நாகமுத்து


- நாகம்மா + செல்லையா
- கந்தையா + இராஜேஸ்வரி
- **முத்துப்பிள்ளை**
- யோகம்மா + அம்பலவாணர்
- கண்மணி + கணபதிப்பிள்ளை
- பசுபதிப்பிள்ளை + மேரி சபீனா
- பேரம்பலம் + தனலட்சுமி
- காமாட்சி + சண்முகரட்ணம்
- தனபாக்கியம் + முத்துக்குமார்
- விஜயரட்ணம் + பேரின்பதேவி

கதிரவேலு + முத்துப்பிள்ளை

- தங்கராணி + பரராஜலிங்கம் → பிரசாத், பிரகாஷ்
- யோகநாதன் + மாரிட்
- சத்தியராணி + ஜெயக்குமார் → வைஷ்ணவி
- கிரிதரநாதன் + ஷாமினி → ஹன்சியா
- குகநாதன் + டலிதா → பிரவீன், பிரசான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org